J. R. T. S.] GENERAL SERIES. [No. 31.

**MOSES, THE PIOUS NEGRO.**

[A translation of the Parent Society's Tract No. 257.]

# விசுவாசபத்தி.

மோசே என்பவனுடைய நல் விசுவாசத்தைக் காட்டியது.

வடக்கமேரிக்காவிற் றென்புறத்திலே பிரயாணமாக ஒரு துரை குதிரையேறிக்கொண்டு போகையில் மிகவும் வயது சென்ற காப்பிரியொருவன் வயலிலே வேலை செய்துகொண்டிருந்தான். அவனுக்கு மோசேயென்ற பேர். அவன் வயது பின்னிட்டவனானதினாலே தலையும் நரைத்துக் கதுப்புஞ் சுரித்துக் கூனியும் போனான்.

அவன் வேலைசெய்கிறதை அந்தத் துரை கண்டு நீ வயதுசென்றவனாய் இருந்தும் உன் சீவனத்துக்காக வேலை செய்து வருந்துகிறாயோவென்க அவன் தன் முகத்திற் கிளம்பின வேர்வையைத் துடைத்துக்கொண்டு ஐயாவே! எனக்கு இவ்வேளையிற்றானும் எவ்வளவு நன்மை கிடைத்திருக்கின்றது. நான் பராபரனோடே முறுமுறுக்க நியாயங் காணாது. அவர் எனக்கு அதிக பாக்கியத்தைத் தராதிருந்தும்

2d Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000.
1844.

என் பாவங்களைப் பொறுக்க இயேசுக் கிறிஸ்
துவையும் அவரை அறிய அவருடைய சுவி
சேஷத்தையும் எனக்குத் தந்தது மிகுந்த த
யவு என்றான்.

அதற்குத் துரை நீ இங்கே தனித்திருக்கை
யாற் பாவஞ் செய்வதற்கு இடமுண்டாய் இ
ராதே என்றார்.

அப்பொழுது மோசே தன் நெஞ்சிலே
கையை வைத்து என் மனந்தான் என்னைப் பா
வஞ் செய்யப் பண்ணுவது. இது நான் போ
கிற இடமெல்லாம் என்னுடனே கூட இருந்
து எப்பொழுதும் உலக நேசத்தை உண்டா
க்குகின்றது. செபம் பண்ணும் பொழுதும்
மற்றும் வேலைகளிலும் இத்துடனே மிகுதியு
ம் போர்பண்ண வேண்டியதாய் இருக்கின்ற
தென்றான்.

துரை அதைக் கேட்டு எனக்குப் பிரியமா
னவனே நீ வெகுகாலமாய் மோட்சத்துக்குப்
போகிற வழியிலே நடக்கிறாயோவென்க அ
வன் நாற்பது வருஷமாக நான் அவ்வழியிலே
நடக்கிறேன். இவ்வளவுகாலமாக ஆண்டவர்
என்னில் அன்பாக இருக்கிறார். இரட்சகரை
நம்புகிறவன் ஒருக்காலுந் தள்ளப்படானென்
பது நிச்சயமே என்றான்.

பின்பு துரை நீ சோதனையிலே ஒருக்கா
லும் இரட்சகரை விட்டுப் பிரியவில்லையோ
வென்றதற்கு, ஆ! என் இருதயம் மிகவும் மோ
சமுள்ளது. என்னைப் பசாசு தன்வசமாக்கிக்
கொள்ளப் பிரயாசப்படுகின்றது. ஆனாலும்

விசுவாசத்தின் நிமித்தங் கிருபையில் இரட்சிக்கப்பட்டீர்கள். உங்களுடையதோ அல்ல, பராபரனாற் கொடுக்கப்பட்டதேயென்று சொன்ன வாக்கியத்தின்படியே அவருடைய கிருபையினாலே எவ்வளவுந் தற்காக்கப்பட்டவனாய் நல்ல வேலையைத் தொடங்கினவன் அதை முடிக்கத் துணிந்திருப்பது போலத் துவக்கியிருக்கிற தேவபத்தியை முடிவுபரியந்தங் காத்துக்கொள்ள ஆசையாயிருக்கிறேன். ஒரு மனிதன் விரையை விரைத்து அது பட்சிகளாலாவது வேறொன்றினாலாவது சேதம்போய் விடாமற் காப்பதுபோல எனக்கு நல்ல உணர்வைத் தந்த பராபரனும் அது பழுதுபடாமற் காப்பாரென்னும் நம்பிக்கையாய் இருக்கின்றதென்றான்.

அதைக் கேட்டுத் துரை உனக்கு நல்லதென்று காணத்தக்கதான பொல்லாத யோசனைகளைப் பசாசு உண்டாக்கிறதில்லையோவென்க மோசே ஆம், ஐயா! சிலவேளை பசாசு வந்து நீ கடின எசமானுக்குத் தொண்டு செய்கிறாய். அவர் உனக்குத் துன்பத்தையுந் தரித்திரத்தையும் வரவிடுகிறார். நீ அவரை விட்டு என்னைப் பின்சென்றால் உனக்கு அதிக சுகசெல்வத்தைத் தருவேனென்கிறதுண்டு. ஆனாலும் அவர் கடின எசமானாய் இராமல் நல்ல எசமானாய் இருக்கிறார் என்பதையும் பசாசு பொய்யன் என்பதையும் கிறிஸ்துநாதர் இரக்கமுள்ளவராய் இருந்து மோட்ச பாதையில் நடத்தப்படத் தம்மண்டையிலே வரவே

ண்டுமென்று ஆதரவாய் அழைக்கிறாரென்பதையும் மறந்துபோனதில்லை. ஆ! என்னுடைய எசமானைக் கடினமுள்ளவர் என்று சொல்வதெப்படி. நான் கலக்கமடையுங் காலங்களில் என்னைத் தேற்றித் துன்பப்படுங் காலங்களிலும் எனக்கு ஆறுதல்பண்ணி வருகிறார். ஐயோ! அவரை நான் நேசிக்கவேண்டிய பிரகாரம் நேசியாததற்காய் என்னைப் புறக்கணித்துப்போடாமல் நான் இடேறும்படி என் பாவத்தையெல்லாந் தாந்தாமே தாங்கி மரணம் அடைந்தார். என் அக்கிரமத்தின் நிமித்தம் எனது பெண்சாதி பிள்ளைகளையும் மற்றும் எனக்குள்ள எல்லாவற்றையும் என்னைவிட்டு எடுத்துப் போட்டாலும் நீதியாய் இருக்கும். அப்படி அவர் செய்தாலும் நன்மையல்லாததொன்றையுஞ் செய்யார். என்று அறிந்து அவரைத் துதிப்பேனென்றான்.

பின்பு துரை நீ பிரசங்கங் கேட்கும்பொழுது உன் மனம் எப்படி இருக்கிறதென்று கேட்கச் சிலவேளை கேட்பதற்குப் போம்பொழுது தூங்கி இளக்கரித்துப் போனாலுஞ் சற்றுநேரத்திலே கேட்கக் கேட்க என் மனம் எழுப்பப்பட்டுச் சந்தோஷிங்கொள்ளும். அந்நேரங்களில் ஆண்டவராற் படைக்கப்பட்டவைகளெல்லாம் அவருடைய மகிமையையும் வல்லமையையுங் காட்டி என்னைப் போதிக்கின்றது. கருத்தாவை வழிபடுகிறதற்கு என்னை ஏவிவிட இப்படியே அநேக ஏதுக்களுண்டென்றான்.

வேதபுத்தகம் வைத்து வாசித்து வருகிறாயோவென்று துரை விசாரிக்க, மோசே நான் வாசிக்கப் பழகி முப்பது வருஷக் காலமாயிற்று. அந்நாள்த் தொடுத்துத் தினந்தினம் அதை வாசித்துச் சிந்தித்துச் செபம்பண்ணிவருகிறேன். ஒய்வுநாட்களில் மழையினாலே அல்லது வியாதியினாலே கோயிலுக்குப் போகக் கூடாதிருந்தால் ஏழையாகிய என்னுடைய குடிலுக்குள்ளே தானும் இயேசுநாதர் வருவாரென்ற நம்பிக்கையினாலே அங்கேயிருந்து தேவவசனத்தை வாசித்துச் செபம்பண்ணுவேன் என்றான்.

ஆ! இந்தச் சம்பாஷணையை வாசிக்கிறவர்களே, மேற் சொல்லப்பட்ட மோசே வயது சென்றவனாகவும் தரித்திரனாகவுமிருந்தும் மனதிலே ஆறுதலையுஞ் சமாதானத்தையும் மோட்ச சந்தோஷத்தையும் அனுபவிக்கிறவனாகவும் இருந்தானே. பின்னை நீங்கள் ஒவ்வொருதருந் தன்தன் நிலைபரந் தனக்குத்தனக்குப் போதாதென்றுந் தான்தான அதிக பெரியவனாக இருக்கவில்லை என்றுந் தன்னைப் படைத்தவரோடே எதிர்ப்பேசி முறுமுறாமல் நமக்குநமக்குண்டாயிருக்கிற நிலைபரமே நமக்குநமக்குப் போதுமென்றும் இவ்வுலக செல்வத்தினாலே மனதுக்கு இரம்மியம் உண்டாவதில்லையென்றும் நாம் இங்கே என்றும் இருக்கிறவர்களல்ல மறு உலகத்துக்குப் பிரயாணக்காரராய் இருக்கிறோம். மறுமையிற் செல்வமே தேடவேண்டிய செல்வமென்றும் நினைத்துக் கருத்தா

ளை வழிபட்டு அவருக்குக் கீழ்ப்படிந்து தா
ழ்மை பொறுமை விசுவாசம் முதலிய குணங்
களைப் பெற்றுக்கொள்ள வகைபார்த்து நடப்
பீர்களாக.

மோசேயென்பவன் மிகுந்த வறியவனாயிரு
ந்துங் கத்தாவுடைய இரக்கத்தைப் பெற்று
க்கொண்ட முறைப்படியே, பாக்கியசாலிகளா
யிருக்கப்பட்டவர்களும் அந்த இரக்கத்தைப்
பெற்றுக்கொள்ளவேண்டும். என்னத்தினாலெ
னில் எவர்களும் பராபரனுடைய பரிசுத்த க
ற்பனைகளை மீறிக் குற்றவாளிகளாய் இருப்பதி
னால் அவனைப்போலச் சகலரும் அவ்விரக்கம்
பெறவேண்டியது அவசரமே. கருத்தராகிய
இயேசுக்கிறிஸ்து உங்கள் பாவத்துக்காக மர
ணமடைந்ததை நம்பிக்கொண்டு அவரே தஞ்
சமென்று அடைந்தீர்களேயாகில் உங்களுக்கு
ம் இரக்கங் கிடைக்கும்.

கிறிஸ்துநாதர் மூலம் உண்டாகுந் தேவ இர
க்கத்தைத் தேடாமற் பராமுகம்பண்ணி ஆக்கி
னைக்கு ஏதுவாயிருக்கிற நீங்கள் அப்படிப்பட்
ட பெரிய இரட்சிப்பைத் தேடாமற் றள்ளிப்
போட்டாற் றேவ ஆக்கினைக்கு எப்படித் தப்
பிக்கொள்ளுவோமென்று பேதுரு என்பவர்
சொன்ன வாக்கியத்தை உற்று வாசியுங்கள்.

இரக்கத்தைப் பெறாதிருந்தால் மரணத்தின்
பின் நரகம் வருமென்பதை நினையாதிருக்கலா
மோ! அது வருவது நிச்சயமே. நடுத்தீர்வை
நாளில் நீங்கள் சருவசிட்டிகராகிய பராபரனுக்
கு முன்பாக வரும்பொழுது இயேசுக்கிறிஸ்து

மூலமாய் வரும் இரக்கத்தைத் தள்ளிப்போட்டவர்களாய்க் காணப்பட்டால் இரக்கத்தைப் பெறாதபடி நித்திய மோட்ச பேரின்பத்தை இழந்து விடுவது மாத்திரமோ நித்திய நரக நெருப்புக்கும் இரையாய்ப் போக வருமே.

மோசேயென்கிற தேவபத்தியுள்ள கிழவனுடைய காரியத்தில் விளங்கிய கிறிஸ்துமார்க்க நன்மையை வாசித்து அறிகிற சகலரும் அவனுடைய முறையையே பற்றி அவனைப்போல இயேசுக்கிறிஸ்து இரட்சகரை விசுவாசித்து நம்பி அவருக்குத் தொண்டு செய்து வந்தால் இவ்வுலகத்திலும் மனத்தேற்றத்துடனே சந்தோஷமுள்ளவர்களாய் இருந்து கடைசியிலே மகிமையான மோட்சத்தையும் அடைவீர்களென்பதற்குச் சந்தேகமில்லை.

---

க. என் மேய்ப்பர் கத்தரானவர்
நன்றாகக் காத்து வாறார்
அனைத்தையும் என் இரட்சகர்
குறைவில்லாமல்த் தாறார்.
எல்லாத்திலும் ருசிகர்
தெய்வீக வார்த்தையாகிய
நன்மேய்ச்சல் எனக்குண்டு.

உ. சீவாறென்னும் வாய்க்கால்களை
அவர் எனக்குக் காட்டி
என் ஆத்துமத்தின் தாகத்தை
அத்தால் நன்றாக ஆற்றி
தாம் இயேசுவென்னப்படுகில்

அடியானை நற்பாதையில்
நேரே நடத்தி வாருர்.
௪. ஓர்வேளை சோதியின்றியே
நான் மரணக் கெடியின்
இருண்ட பள்ளத்தாக்கிலே
நடத்தும் அவதியின்
பொல்லாங்குக்குப் பயப்படேன்
நீர் நீட்டுங்கோலைப் பற்றுவேன்
அது வழியைக் காட்டும்.
௫. அடியேனுக்கோர் பந்தியைப்
பகைஞர்க் கெதிராக
வைத்தெண்ணெய்யால் என் சிரசை
மகா கடாட்சமாக
நீர் அபிஷேகஞ் செய்கிறீர்
அடியேனை நீர் மறவீர்
என் பாத்திரம் நிரம்பும்.
௬. என் சீவனுள்ளமட்டுக்கும்
தெய்வன்மை நான் உணரும்
படிக்கே என்னை நன்மையும்
கடாட்சமுந் தொடரும்
கர்த்தாவின் வீட்டில் இங்கேயும்
பின்பென்னில் அங்கே என்றைக்கும்
நிலைத்துக்கொண்டிருப்பேன்.

முற்றிற்று.